# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.10.01 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)


# சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தம்)

**2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

---

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 29.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகமானது 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தினுடைய முதலாவது அட்டவணையை திருத்துகின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அவ் வட்டவணையின் சட்டப்பயனானது –

(அ) அத்தகைய விடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்திற்கு ஏற்புடையற்படற்பாலதான காலப்பகுதி ஒன்றை நிர்ணயிப்பதன் மூலம் பாகம் Iஅ இன் 24 ஆம் விடயத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பை மட்டுப்படுத்துவதற்குமாகும்;

(ஆ) அத்தகைய விலக்களிக்கப்பட்ட பொருட்களின் மொத்த மற்றும் சில்லறை விற்பனை உள்ளடங்கலாக தெளிவான பாகம் I ஆ இன் 4 ஆம் விடயத்தின் மீது வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பை செய்வதற்குமாகும்;

(இ) கொள்கலன் முனைய இயக்கிகள் மூலம் சர்வதேச போக்கு வரத்து தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சேவைகளுக்கான விலக்களிப்புக்கு விண்ணப்பிப்பதன் மூலம் பாகம் II இன் 4 ஆம் விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட விலக்களிப்பை விரிவாக்குவதற்குமாகும்; அத்துடன்

(ஈ) பாகம் II இன் கீழ் நிதிச் சேவைகளுக்கு விலக்களிப்பதற் காகவும்.

## சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு
## (திருத்தம்)

ச.வ.- ஓ 12/2025

# 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடிரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்**

**1.** (1) இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின்    ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) பிரிவு 2 இன் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் தவிர்ந்த, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எத்தேதியன்று சட்டமூலம் பாராளுமன்றச் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) பிரிவு 2 இன் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் முறையே 2025 பெப்புருவரி 18, 2025 யூலை 1 அத்துடன் 2026 சனவரி 1 ஆகிய தேதிகளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தின் முதலாம் அட்டவணையை திருத்துதல்**

2. 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் பாகம் Iஅ இன் 24 ஆம் விடயத்தில், “மின்சாரத்தை வழங்குவதற்கு இலங்கை” என்ற சொற்களுக்குப் பதிலாக, “மின்சாரத்தை வழங்குவதற்கு 2025 பெப்புருவரி 18 ஆம் தேதிக்கு முன் இலங்கை” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

PL 15444 - 470 (2025/09)

(2) அதன் பாகம் Iஅ இன் 4 ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவது இடப் படுகின்றது:-

"4. (அ) 2025, யூலை 1 ஆந்தேதிக்கு முன் ஓர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விற்பனை செய்யப்படும் பெற்றோல், தீசல் அல்லது மண்ணெண்ணெய்; அத்துடன்

(ஆ) 2025 யூலை 1 ஆம் தேதியிலிருந்து பயனுறுவதாக பெற்றோல், தீசல் அல்லது மண்ணெண்ணெய்;"; அத்துடன்

(3) அதன் பாகம் II இல்-

(அ) 4 ஆம் விடயத்தில், "பண்டங்களையும்" எனும் சொற்களுக்குப் பதிலாக "கொள்கலன் முனைய இயக்கிகளால் சர்வதேச போக்குவரத்து தொடர்பாக வழங்கப் படும் சேவைகள் உட்பட பண்டங்களையும்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) 23 ஆம் விடயத்தில், "ஏதேனும் சேவைகள்; அத்துடன்" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் சேவைகள்;" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) 24 ஆம் விடயத்தில், "வழங்கப்படும் சேவைகள்." எனும் சொற்களுக்குப் பதிலாக "வழங்கப்படும் சேவைகள்; அத்துடன்" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) 24 ஆம் விடயத்தை உடனடுத்து பின்வரும் புதிய விடயத்தை சேர்ப்பதன் மூலமும்:-

"25. இரண்டாயிரத்து இருபத்தாறாம் ஆண்டு சனவரி 1 ஆம் தேதி முதல் பயனுறுவதாக இலங்கையில் நிதிச் சேவைகளை வழங்கும் தொழிலை கொண்டுநடாத்துகின்ற எவரேனுமாளின் நிதிச் சேவைகளும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.